கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**03/2015**

நாள் : 12.11.2025

வா.சா.1 – அகிலாராணி

பிரதிவாதிகள் **3** மற்றும் **5** தரப்பில் குறுக்குவிசாரணை

1ம் பிரதிவாதி ராமசாமிக்கு யார் யார் எல்லார் வாரிசுகள் என்றால் - நான், சந்திரசேகரன், சேதுராஜூலு, விஜயலட்சுமி, ஜோதிலட்சுமி ஆகியோர் வாரிசுகள் ஆகும். நீங்கள் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், தபசில் சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் - எங்களுக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டதாகும். உங்கள் அப்பா ராமசாமி தபசில் சொத்துக்களைப் பொறுத்து யாருக்கும் உயில் மூலமாகவா அல்லது செட்டில்மென்ட் மூலமாகவோ பாத்தியப்படுத்தினாரா என்றால் - இல்லை. உங்களது அப்பா ராமாசாமியின் இறப்பிற்கு பின் தபசில் சொத்துக்களை யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் - அவரது பெண்பிள்ளைகளான நான் விஜயலட்சுமி, ஜோதிலட்சுமி அனுபவிக்கவில்லை, இறந்த சந்திரசேகரன் மற்றும் சேதுராஜூலு ஆகியோர் அனுபவித்து வந்தார்கள். தபசில் சொத்தில் வாரிசுமுறைப்படி விஜயலட்சுமிக்கும், ஜோதிலட்சுமிக்கும் பாகம் உள்ளது என்றுசொன்னால் - சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**